பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 26 வியாழக்கிழமை 09.06.2022 கதிர் 216

இனி இது ரகசியம் அல்ல!

'பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்றான் பாரதி. அது சரி தான் போலும். இலங்கையில் நிலைமை அப் படித்தான் இருக்கின்றது. மக்க ளின் வாழ்க்கை முறை பிணம் தின்னும் சாத்திரமாகி விடுமோ என்ற அச்ச சூழல். ☞2

# கோட்டா பதவி விலக வேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும்!

## நாடாளுமன்றத்தையும் கலையுங்கள் என்கிறார் சுமந்திரன் அதுவேதான் நெருக்கடிக்குத் தீர்வு எனவும் அவர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 09

நாடு இன்று இத்தகைய மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குவதற்கு பெருமளவு பொறுப்பேற்க வேண்டியவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தான். தனி மனிதராக அவர் இழைத்த தவறுகள்தான் இந்த நிலைமைக்கு முழுக் காரணம். அதனால் அவர் உடனடியாகப் பதவி விலக வேண்டும். அல்லது விலக்கப்பட வேண்டும்.

அதேநேரம், நாடாளுமன்றமும் தனக்கான ஆணையை – தனித்துவத்தை – ஸ்திரத் தன்மையை – நம்பகத் தன்மையை – இழந்து விட்டது. அதனால் அதனை யும் கலைக்க வேண்டும். அந்த இரண்டையும் செய்தால்தான் நாம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வாய்ப்புக் கிட்டும்.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் காட்டத்துடன் விவரித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். ☞8



## கடல் வழியாக வெளிநாடு செல்ல முயற்சித்த 91 பேர் சிக்கினராம்!




புத்தளம் – மாரவில பிரதேசத்திலும் மேற்கு கடற்பரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, கடல் மார்க்கமாக இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடு தப்பிச் செல்ல முயன்றனர் எனச் சந்தேகிக் கப்படும் 91 பேரை கடற்படையினர் கைது செய்து தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

மேற்கு கடற்படை ☞8


## மற்றைய நாடுகளுடன் சேர்ந்து இலங்கைக்கு உதவுமாம் சீனா!



இலங்கையின் கடன் சுமையை சமாளிக்க மற்ற நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன்இணைந்து உதவுவதில் சீனா தீவிரமான பங்கை வகிக்க தயாராக உள்ளது என்று சீன வெளி விவகார அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர்ஜாவோ லிஜியன் தெரிவித்தார். ☞2

## நல்லின ஆடுகள் ஐந்து தலைமன்னாரில் மீட்பு!

### இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டவையா?



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 09

தலைமன்னார் கிராமம் கடற்கரைக்கு அண்மையாக உள்ள பற்றைப் ☞2

## பஸில் இன்று இராஜினாமா? எம்.பியாகின்றாரா தம்மிக்க?

### சிங்கள இணையம் பரபரப்புச் செய்தி

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இன்று இராஜினாமா ☞2

### காலி முகத்திடல் தாக்குதல்

## ஓர் எம்.பிக்குப் பிணை மற்றவருக்கு இல்லை!

கடந்த 9 ஆம் திகதி கொள்ளுப்பிட்டிய மற்றும் காலி முகத்திடலில் இடம்பெற்ற வன்முறைச் சம் பவங்கள் தொடர்பில், மே 17 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இரண்டு எம்.பிக்களில் ஒருவரான மிலன் ஜயதிலக்க மற்றும் 12 பேருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த, மொரட்டுவ மேயர் சமன்லால் பெர்னாண்டோ மற்றும் ஒருவரை ஜூன் மாதம் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பாட்டன், மாமன், அண்ணனால் துஷ்பிரயோகம்; சிறுமி கர்ப்பம்

### மொனராகலையில் அதிர்ச்சி விவகாரம்

பதின்மூன்று வயது சிறுமி ஒருவர் பாட்டன், மாமா மற்றும் அவரது மூத்த சகோதரர் ஆகியோரால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

மொனராகலை, எத்திமலே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பாடசாலை மாணவியான சிறுமிக்கு ☞2

## தேனீக்கள் கொட்டி முதியவர் உயிரிழப்பு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஓட்டமாவடி பகு தியில் நேற்றுப் பகல் தேன் பூச்சிகள் கொட்டியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாழைச் ☞2



# நாட்டின் வருமானத்தில் காற்பங்கை விழுங்கும் படைகளை யாருடன் போராட வைத்துள்ளீர்கள்?

## சுரேஷ் பிறேமச்சந்திரன் காட்டத்துடன் கேள்வி

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூன் 09

உலகிலே அதிகளவு எண்ணிக்கையில் இராணுவத்தினரை வைத்திருக்க கூடிய நாடுகளில் 14 ஆவது இடத்தில் இலங்கை இருக்கிறது. இந்தப் பெரும் படை தேவைதானா? இது குறித்துச் சிங்களத் தரப்பினர் யாருமே வாய் திறந்து பேசவில்லை, இந்த இந்த நாட்டின் வருமானத்தில் கால் பங்கினை விழுங்கும் விழுங்கும் இந்த படையினரை யாருக்கு எதிராக போராட வைத்துள்ளீர்கள்? அரசாங்கமே நாட்டினை இந்த நிலைமைக்கு கொண்டு வர காரணம். பெருமளவு இராணுவத்தினரை வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சிகளிடமிருந்து பறிக்கப் பட்ட அதிகாரங்களை ☞8



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கையில் யார் அந்தப் பேய் என்பதுதான் கேள்வி. எனக்கு என்னவோ பாரதியின் வசனத்துக்குப் பொருத்தமான அந்தப் பட்டத்தை அப்படியே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது மாத்திரம் சுமத்திவிட்டுப் பார்த்திருப்பதில் அர்த்தம் இல்லை என்றே தோன்றுகின்றது.

நாட்டை வழிநடத்த வேண்டிய, படித்த பெருமக்களே – புத்திஜீவிகளே – கல்வி மான்களே – பேய்ப் பிடித்தவர்களாக நடந்து கொள்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதார ரீதியில் இழைத்த பெரும் தவறு எங்கிருந்து ஆரம்பமானது என்பதை நேற்று நாடாளுமன்றத்தில் சுமந்திரன் புட்டு புட்டுக் காட்டியிருந்தார். அது பற்றித் தனியான செய்தி பிரசுரமாகியுள்ளது. பார்த்து அறியலாம்.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு, அந்தத் தேர்தலுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவரைச் சூழ ஒரு புத்திஜீவிகள் கூட்டம் திரண்டு இருந்தது. ‘வியத்மக’, ‘எளிய’ என்ற பெயர்கள் கொண்ட அந்த அமைப்புகளில் பலநூறு புத்திஜீவிகள் இடம்பெற்றிருந்தனர் என்று கூறப்பட்டது. இந்தப் புத்திஜீவிகளே கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்தார்கள். ஆர்ப்பாட்டமாக அதை வெளியிட்டார்கள்.

இப்போதைய நெருக்கடிக்குக் காரணமான பெரும் பொருளாதாரச் சறுக்கல் கோட்டாபய ராஜபக்ஷவின் அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்துதான் ஆரம்பமாகின்றது என்பதை சுமந்திரன் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி அம்பலப்படுத்தியிருக்கிறார்.

அது கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் என்றாலும், அவரைச் சூழ இருந்த புத்திஜீவிகள் தயாரித்த ஆவணம் அது. இன்று நாடு பெரிய பொருளாதாரச் சிக்கலில் சிக்கி, அதலபாதாளத்தில் விழுந்து கிடப்பதற்கு, அந்தப் புத்திஜீவிகள் எல்லோரும் சேர்ந்து தயாரித்த தேர்தல் விஞ்ஞாபனமும், அதில் உள்ள கொள்கைப்படி பொருளாதார விடயங்களை கோட்டாபய ராஜபக்ஷ கையாண்டமையும்தான் காரணம் என்பது இப்போது தெளிவானது.

நாடு இன்று நடுவீதியில். அந்த நெருக்கடி நிலைமைக்கு நாட்டை வழி நடத்தக் காரணமான வியத்மக மற்றும் எளிய அமைப்புகளின் புத்திஜீவிகளைக் காணவில்லை. பலரும் தலைமறைவு. ஆனால், இன்று மக்கள் வாழ்க்கை நிலையோ பிணந்தின்னும் சாத்திரங்கள் என்ற இழிந்த கட்டத்தில். ஆட்சி இப்படி வெளிப்படுத்தப்படக் காரணமான அவர்கள்தான் பாரதியின் வார்த்தையில் ‘பேய் அரசாண்டால்...!’ என்ற சொல்லாடலில் வருகின்ற பேய்கள்.

அத்தகைய பேய்கள் இன்னும் நமது சமூகத்தை விட்டு விலகவில்லை. அல்லது திருந்தவில்லை.

நாடு இருக்கும் இக்கட்டில் ஓர் அமைச்சரோடு இருக்கும் முரண்பாட்டுக்காக நாட்டை முழு மின்வெட்டு இருட்டில் ஆழ்த்தப் போவதாக இன்னொரு புத்திஜீவிகள் குழுவும் பொறியியலாளர்கள் என்ற பெயரில் களத்துக்கு வந்திருக்கின்றது. இன்று நாட்டில் பிணந்தின்னும் சாத்திரங்கள் நிலவுவதற்கு இத்தகைய புத்திஜீவிப் பேய்களின் செயல்தான் காரணம்.

படித்த கற்றறிந்த, மேதைகளான இந்த புத்திஜீவிகளைப் பாரதியின் வார்த்தையில் ‘பேய்கள்’ என்ற சொல்லில் விமர்சிப்பது கொஞ்சம் அநாகரிகமாகவும் மனதை நெருட விடுவதாகவும் இருந்தாலும் கூட இந்த இக்கட்டு சமயத்தில் இத்தகைய கீழ்த்தரமான – மோசமான – முட்டாள்தனமான – முரட்டுத்தனமான – அபத்தமான – செய்கைக்கு முன்னறிவித்தல் கொடுப்பவர்கள் நிச்சயமாகப் பிசாசுகள் என்று வர்ணிக்கப்படுவதும் தவறில்லை என்றுதான் கருதுகிறேன்

பேய்களின் அரசாட்சி என்பது ஜனாதிபதி கதிரையில் இருந்து மட்டும்தான் வர வேண்டும் என்பது அல்ல. தொழிற்சங்கப் பெயர்களில் அதிகாரங்களை கையில் வைத்துக்கொண்டு, நிபந்தனைகள் விதித்து, அட்டகாசம் செய்து, அதிகாரத் தர்பார் பண்ணும் பேய்களின் தரப்பிலிருந்தும் கூட வரலாம்.

காரணம் எதுவாகவும் இருக்கலாம் – நோக்கம் எதுவாகவும் இருக்கலாம் – இலக்கு எதுவாகவும் இருக்கலாம் – இன்றைய இக்கட்டு சமயத்தில் நாட்டை மின்வெட்டில் – முழு இருட்டில் – விடுவோம் என்று திமிரோடு கூறும் இந்தப் புத்திஜீவிகள் பேய், பிசாசை விடக் கீழ்த்தரமானவர்கள். அதை சொல்வதில் எனக்கு வெட்கம் எதுவும் இல்லை.

மின்சார விநியோகத்தை அவசரகால சேவையாக வர்த்தமானி மூலம் ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். அதில் ஒரே ஒரு மன வருத்தம்தான். அந்த உன்னத் சேவையை வழங்குகின்ற பொறுப்பில் மேல்மட்டத்தில் இருப்பவர்கள் பிசாசாக செயற்படும்போது அவர்களின் சேவையை அவசரகால சேவையாய் அறிவிக்க வேண்டிய நிலைமை இருப்பது சமூகத்திற்குப் பரிதாபமானது.

– மின்னல் –

## மற்றைய நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வழக்கமான செய்தியாளர் கூட்டத்தில் நேற்றுப் (புதன்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெளிநாட்டு முதலீட்டுபங்காளிகளின் நியாயமானஉரிமைகளைபாதுகாக்கவும் மற்றும் அதன் உள்நாட்டு சந்தையின் நிலையான செயற்பாட்டை உறுதிப்படுத்தவும் இலங்கைக்கு சீனா அழைப்பு விடுக்கிறது என அவர் கூறினார்.

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமீபத்தில் ஒரு நேர்காணலில், ‘தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்காவை நோக்கி சீனா தனது மூலோபாய கவனத்தை மாற்றுவதாகத் தெரிகிறது. நிதிச் சிக்கலில் உள்ள தெற்காசிய நாடுகள் பெய்ஜிங்கில் இருந்து அதே கவனத்தைப் பெறவில்லை’ என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் கருத்துக்களுக்குப் பதிலளித்த ஜாவோ, ஒரு நல்ல அண்டை நாடு என்ற வகையில், சீனா இலங்கை மக்களுக்கு 500 மில்லியன் யுவான் (சுமார் ஏழரைக் கோடி டொலர்) மனிதாபிமான உதவி உட்பட பல நிவாரணங்களை வழங்கியுள்ளார் எனத் தெரிவித்தார்.

தெற்காசிய நாடுகளுடனும் நல்ல அண்டை நாடுகளுடனும் நல்லுறவை வளர்ப்பதற்கு சீனா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது என்றும் அவர் கூறினார்.

பிராந்திய அமைதி மற்றும் வளர்ச்சியின் நேர்மறையான போக்கைப் பேணவும் மக்களுக்கு அதிக நன்மைகளை கொண்டு வரவும் சீனா தயாராக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## நல்லின ஆடுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பகுதியில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட 5 ஆடுகள் தொடர்பில் அறிக்கையிடுமாறு மன்னார் மிருக வைத்தியசாலை அதிகாரிக்கு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆடுகள் ஐந்தும் இந்தியாவிலிருந்து கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கடற்படையினரின் அறிக்கையை அடிப்படையாக வைத்து பொலிஸார் முன்வைத்த சமர்ப்பணத்தை அடுத்தே மன்னார் நீதிவான் எச்.ஏ.ஹிபதுல்லா, மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

கடந்த 3ஆம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர்



தலைமன்னார் கிராமம் பகுதியில் 5 நல்லின ஆடுகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் உள்ளமையைக் கண்டுள்ளனர். அவற்றை மீட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவற்றில் நான்கு கிடாய்களும் ஒரு மறியும் அடங்குகின்றன. அவை தொடர்பில் புலன்விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று மன்னார் நீதிவான் நீதிமன்றில் அறிக்கையிட்டனர்.

அந்த ஆடுகள் தன்னுடையவை என ஒருவர் நீதிமன்றில் உரிமை கோரிய போதும், உரிய சான்றுகளை அவர் சமர்ப்பிக்கத் தவறியமையால் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஆடுகள் திருக்கேதீச்சர ஆட்டு மந்தையில் விட்டுப் பராமரிக்க நீதிமன்றம் அனுமதியளித்தது.

# எம்.பிக்களுக்கும் இனி நாட்டுப்புற உணவுகள்!

### ஜனாதிபதி பணிப்புரை

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாட்டுப்புற உணவுகளை வழங்குவது தொடர்பாகப் பரிசீலிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி இந்தக் யோசனையை முன்வைத்துள்ளார்.

பாதுகாப்பான வனப் பிரதேசங்களில் அதிகமாக காணப்படும் பலாக்காய் போன்றவற்றை பறிப்பதற்காக, வனங்களுக்குள் நுழைவதற்கு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற யோசனை அமைச்சர் மஹிந்த அமரவீரவால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

அதன் போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பலாக்காய், ஈரப்பலா, வற்றாளைக் கிழங்கு என்பவற்றை வழங்குமாறு தெரிவித்தார்.

அதன் பிரகாரம் நாடாளுமன்றம் கூடும் நாள்களில் நாட்டுப்புற உணவு வகைகளும் நாடாளுமன்ற உணவகம் மூலமாக வழங்கப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு 2021 இல் 15 லட்சம் ரூபா இலாபம்

கடந்த வருடம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 15 லட்சம் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வசமுள்ள மரத்தளபாடங்களை வெளிநாடுகளில் விற்பனை செய்வதன் மூலம் அந்நிய செலாவணியைக் ஈட்டுவது தொடர்பாக இந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## தேனீக்கள் கொட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை உமர் வைத்தியர் வீதியைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையாக மீராலெப்பை அபூசாலி (74 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

ஓட்டமாவடி சந்தை வழியாக தனது வீட்டுக்கு வரும் வழியில் இந்த அனர்த்தத்தை அவர் எதிர்கொண்டார். கூடு கலைந்திருந்த நிலையில் தேன் பூச்சிகள் அவரைக் கொட்டின. பாதிக்கப்பட்ட அவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவர் இருதய நோயாளி என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இருந்து அவசர பிரிவு வாகனத்தின் ஊடாக உறவினர்களின் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பஸில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
செய்யவுள்ளார் என்று சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கு அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே சட்டம் நிறைவேறுவதற்கு முன்னரே பஸில் பதவி விலகுகின்றார்.

அந்த இடத்துக்கு பிரபல வர்த்தகரான தம்மிக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளார் எனவும், அவருக்கு முக்கிய அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் எனவும் தெரிய வருகின்றது.

## பாட்டன், மாமன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வயிற்று வலி ஏற்பட்டதையடுத்து அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் சிறுமி கருத்தரித்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வைத்திய சாலை அதிகாரிகள் எத்திமலே பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியமையை அடுத்து பொலிஸார். விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதில், சிறுமி தனது பாட்டன், மாமா (தாயின் சகோதரர்) மற்றும் சிறுமியின் மூத்த சகோதரரால் தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

சிறுமியின் சகோதரனை முதலில் கைது செய்த காவல்துறையினர், இதையடுத்து பாட்டன் மற்றும் மாமாவைக் கைது செய்ய விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிறுமி மேலதிக சட்ட வைத்திய மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கச்சத்தீவை இந்தியா பெறுவதாக இருந்தால் எங்கள் பிணங்களை தாண்டியே பெறவேண்டும்

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசம் போர்க்கொடி

தமிழகத்தில் உள்ள 2 ஆயிரம் விசைப் படகுகளை நிறுத்தினால் இந்தியா எங்களுக்கு வழங்கிய உதவியின் இரண்டு மடங்கை நாம் திருப்பி அவர்களுக்கு வழங்குவோம் என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

தொண்டமானாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே நா.வர்ணகுலசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

நிவாரண பொதிகளை வழங்கி விட்டு கச்சத்தீவைபெற்றுக் கொள்ளலாம் என இந்தியா கனவிலும் நினைக்கக் கூடாது. கச்சத்தீவை பெறுவதாக இருந் தால் எங்களின் பிணங்களை தாண் டியே பெறவேண்டும்.



தமிழகத்திலுள்ள விசைப்படகு களால் தான் எமக்குப் பிரச்சினை. நாட்டுப் படகால் எமக்கு எந்தவித பிரச்சினையும் கிடையாது. விசைப்படகுகள் நிறுத்தப்பட்டால் இரண்டு பகுதி மீனவர்களும் இணைந்து பேசி கடற் றொழிலை செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

## நிலைமை நாளுக்குநாள் மோசமடைவதால் அச்சத்தில் யாழ். போதனா வைத்தியர்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை பொருளகளுக்கும், மருந்துப் பொருள்களுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டு மோசமான நிலையில், காணப்படுவதாக வைத்திய நிபுணர் க.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் சிகிச்சையளிக்க முடியாது கடும் நெருக்கடியில் வைத்தியர்கள் கையறுநிலையில் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நோயாளிகளின் எண்ணிக்கைகடுமையாகஅதிகரித்துள்ளமையால் சிகிச்சைகளுக்கு தேவையான பொருள்களுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த நிலை தொடரும் பட்சத்தில் எதிர்காலத்தில் நோயாளிகளுக்குத் தேவையான உணவைக் கூட வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## அரச திணைக்களங்களில் புதிய திட்டம் நடைமுறை!

அரச நிறுவனங்களில் புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் காகிதங்களுக்காக செலவிடப்படும் பணத்தை சேமிப்பதற்காகவே புதிய விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களின் வருடாந்த மற்றும் அரையாண்டு அறிக்கைகளை நாடாளுமன்றம், கணக்காய்வாளர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஈ – புக் வடிவில் அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், பல்வேறு படிவங்களை நிரப்புவதற்குப் பதிலாக ஒரு படிவம் வழங்கப்பட்டு வட்ஸ் – அப் போன்ற சமூக ஊடக வழிமுறைகளை பயன்படுத்தி உரிய தரப்பினருக்கு படிவங்களை அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

## ஜே.வி.பி;. கட்சியின் முக்கியஸ்தர்களிடம் அல்குர்ஆன் சிங்களப் பிரதி கையளிப்பு

ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்திதலைமையிலான அணியினரிடம் புனித அல்குர்ஆன் சிங்களப் பிரதி கையளிக்கப்பட்டுள்ளது.

சமகால அரசியல் தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டும் என வலியுறுத்தி அரசியல் கொள்கை பிரசாரத்தை புதன் கிழமை ஏறாவூரில் மேற்கொண்டுள் ளனர்.

இதன்போதே சுனில் ஹந்துன் நெத்தி தலைமையிலான அணியினரிடம் புனித அல்குர்ஆன் சிங்களப்பிரதிகையளிக்கப்பட்டது.

ஜே.வி.பி.யின் பிரசாரகர்களும் அதன்ஏறாவூர்அமைப்பாளர்முஹம்மது உசனார் கரீம் றஹ்மான் தலைமையிலான அணியினரும் ஏறாவூர் நகர கடைத் தெருக்களில் மக்களை விழிப்புணர்வூட்டும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது அங்கு வருகை தந்த செயற்பாட்டாளரான இளைஞர் ஜே.ஆர். ஏ.சஜித் என்பவரால் இந்த சிங்கள அல்குர்ஆன், ஜே. வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுனில் ஹந்துன் நெத்தியிடம் கருத்து தெரிவித்த செயற்பாட்டாளரான சஜித், ‘புனித அல்குர்ஆனையும் அதனை பின்பற்றும் முஸ்லிம்களையும் பற்றி மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரங்களால் இஸ்லாமியர்கள் விரோதிகளாகப் பார்க்கப்படுகிறார்கள்.

இந்த நாட்டில் வாழும் சகோதர சமூகங்கள் புனித அல்குர்ஆனையும் முஸ்லிம்களையும் பற்றிய புரிதல்களை அறிந்திருப்பது இன நல்லிணக்கத்துக்கான சிறந்த வாய்ப்பாக அமையும், அதனாலேயே தாம் வெறுப்பு பிரசாரத்தை நீக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். – எனக் கூறியுள்ளார்.

## பொருளாதார நெருக்கடியில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு உதவி



விஷ்வ இந்து மற்றும் இணையும் கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் பொருளாதார நெருக்கடிக்குள்ளான குடும்ப சிறுவர் கள் அதிகம் கல்வி கற்கும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் மற்றும் நுணாவில் கிழக்கு மகளிர் பாடசாலை மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம்கற்றல்உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி சு.யோகேஸ்வரி மாவட்ட செயலக சிறுவர் பாதுகாப்பு இணைப்பாளர் திரு இ.செந்தூரன். மாவட்ட செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப்பாளர் திரு க.மனோகரன் மற்றும் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி லதா மற்றும் திருமதி நியுசியா ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்வுதவித்திட்ட நிகழ்வில் விஷ்வ இந்து அமைப்பின் பிரதிநிதிகளால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இவர்களுக்கான. மதிய உணவும் வழங்கப்பட்டது.


CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING
UNIVERSITY OF JAFFNA

Certificate Course in Basic ICT Skills

Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna invites applications from the eligible candidates for the above course.

Programme Objectives

- ★ Fundamentals of a computer system, Network and Internet
- ★ The uses and impacts of new technologies in ICT.
- ★ Developing a fully completed document. (MS Word)
- ★ Handling spreadsheet application software. (MS Excel)
- ★ Creating an efficient database. (MS Access)
- ★ Creating effective presentations. (MS PowerPoint)

ENTRY REQUIREMENTS

- ★ An applicant must have passed the G.C.E A/L Examination in all three subjects in any stream

Duration

- ★ The duration of the course of 60 hours
- ★ Classes will be conducted in weekends

Course Fee
Course Fee Rs.20000.00

How to Apply

- ★ Application could be obtained from the Centre for Open and Distance Learning, University of Jaffna during 9.00am to 2.00pm on weekdays.
- ★ Application form could be downloaded from the website www.codl.jfn.ac.lk
- ★ Duly filled application along with the payment slip for a sum of Rs.500/= payable at the Peoples Bank. AC No: 890012520002088 should be sent under registered cover to the following address on or before 22nd June 2022. “Certificate Course in Basic ICT Skills” should be written on the left hand corner of the envelope. Address:

Deputy Registrar,
Center for Open and Distance Learning,
University of Jaffna.

Registrar
University of Jaffna
08.06.2022

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இத்துணை படைகள் ஏன்?

இத்துணை மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடிகள் வந்த பின்னரும் கூட, இன்னமும் தென்னிலங்கை மக்கள் தமது பேரினவாத மேலாதிக்கச் சிந்தனையில் இருந்து விடுபட்டு வந்து, நியாயமான முறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையை நாடவில்லை, அதற்கு அவர்கள் தயாராக இல்லை என்ற உண்மையை வெளிப்படையாக அம்பலப்படுத்தி, நேரடியாகக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

வரவு – செலவுத் திட்டத்தில் பெரும் தொகை துண்டு விழுவதும், துண்டு விழும் தொகையை ஈடுகட்டுவதற்கு பெருமளவு கடனைத் தொடர்ந்து வாங்கிக் குவித்ததும்தான் இந்த நெருக்கடியின் அடிப்படை என்பது அரிச்சுவடி படித்த மாணவனுக்கும் கூடப் புரியும்.

அப்படிப் பார்த்தால் வரவு – செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை என்ற பிரச்சினையைத் தீர்த்தால் சிக்கலை சமாளித்ததாகி விடும் என்பது தெளிவு.

துண்டு விழும் தொகையைக் குறைக்க என்ன செய்ய வேண்டும்? செலவைக் குறைக்க வேண்டும். வீண் விரயங்களை வெட்டிக் குறைக்க வேண்டும். வரவுத் தொகையைக் கூட்ட வேண்டும்.

இந்த அடிப்படை தெரிந்திருந்தும் கூட – புரிந்திருந்தும் கூட – பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனைப் போக்குக் காரணமாக சில விடயங்களைச் செய்ய மறுத்து, வேண்டும் என்றே அடம்பிடித்து, நாட்டைக் குட்டிச் சுவராக்குகின்றது கொழும்பு ஆட்சிப் பீடம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தின் கணக்கோடு ஒப்பிடுகையில் உலகில் அதிகளவு இராணுவத்தினரை வைத்திருக்கும் நாடுகளின் வரிசையில் 14ஆவது இடத்தில் இலங்கை உள்ளது என்ற உண்மையை எடுத்துரைக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

“இந்தப் பெரும்படை தேவைதானா? இது குறித்து சிங்களத் தரப்பினர் எவரும் பேசுகின்றனர் இல்லை. இந்த நாட்டின் வருமானத்தில் கால்பங்கை விழுங்கும் இந்தப் படையினரை யாருக்கு, எதிராகப் போராட வைத்துள்ளீர்கள்?” – என்று கேள்வி எழுப்புகின்றார் சுரேஷ்.

கற்றுக் கொண்ட பாடங்களில் இருந்து படிப்பினை பெறாதவன் திருந்தப் போவதில்லை. மீண்டும் மீண்டும் பட்டழிந்து கெட்டுப் போவதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.

நாட்டின் செலவுகளைக் குறைத்து, இந்த நெருக்கடியிலிருந்து மீளும் அவசரத்திற்கு மத்தியிலும் – அவசியத்துக்கு இடையிலும் – கட்டாயத்துக்குள்ளும் – கூட இராணுவத்துக்கு ஏன் இத்துணை செலவு, பாதுகாப்புத்துறைக்கு ஏன் இவ்வளவு நிதி விரயம் என்று கேட்கும் மனநிலை பௌத்த, சிங்களப் பேரினவாதத் தரப்புகளுக்கு இல்லவே இல்லை.

இதற்கு, நாட்டின் பாதுகாப்பு என்ற உயர் சிந்தனை – கரிசனை – காரணமன்று. பௌத்த, சிங்கள மேலாண்மையைத் திணித்து, இந்த நாட்டின் சிறுபான்மையினரை நாட்டின் மூன்றாந்தரப் பிரஜைகளாக அடக்கி வைத்திருப்பதற்கு அந்தப் பேரினப் படையணியே அந்த மேலாண்மை போக்குச் சிந்தனையாளர்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. அந்தப் பேரினவாத, மமதைச் சிந்தனையில் கட்டப்பட்ட தென்னிலங்கையின் மனவமைப்பில் அமிழ்ந்து கிடக்கும் கொழும்பு ஆட்சிப் பீடமும் இந்த உண்மையை உணர்ந்தால் கூட, திருந்தும் நடவடிக்கைக்கு முன்வராது என்பது நாட்டின் சாபக்கேடு.

# மோசமான உணவு நெருக்கடியை இலங்கை அடுத்த சில மாதங்களில் எதிர்கொள்ளும்

## ஐ.நாவின் இரு அமைப்புகள் அறிக்கை

இலங்கையை பட்டினியால் பாதிக்கப்படக் கூடிய நாடுகளின் பட்டியலில் சேர்த்துள்ள ஐ.நாவின் இரு அமைப்புகள் இலங்கை எதிர்வரும் மாதங்களில் எதிர்கொள்ளப் போகும் உணவு நெருக்கடி தொடர்பாக எச்சரித்துள்ளன.

உலக உணவு திட்டமும் உணவு விவசாய ஸ்தாபனமும் இணைந்து ஜுன் மாதம் முதல் செப்டெம்பர் வரை உலக உணவு நிலை எவ்வாறானதாகக் காணப்படும் என்பதை தெளிவுபடுத்தும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் உணவுப்பாதுகாப்பின்மைக்கான முக்கிய காரணங்களாக பொருளாதார நெருக்கடி, விலை அதிகரிப்பு, பயிர்ச்செய்கை உற்பத்தி வீழ்ச்சி ஆகியன காணப்படுகின்றன.

உள்நாட்டு விவசாய உற்பத்தி, சர்வதேச அளவில் விலை அதிகரிப்பு, நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடி ஆகியவை இணைந்து கடுமையான உணவு நெருக்கடியையும் பணவீக்கத்தையும் அதிகரிக்கப் போகின்றன. இது அடுத்த சில மாதங்களில் உணவுப்பாதுகாப்பில் மேலும் சரிவை ஏற்படுத்தப்போகின்றது.

1948 இல் சுதந்திரம்பெற்ற பின்னர் இலங்கை இம்முறையே மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்றின் தாக்கமும் கொவிட் பரவத்தொடங்குவதற்கு முன்னதாக அறிவிக்கப்பட்ட வரிச்சலுகைகளும் கடந்த பல தசாப்தங்களாக அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளன.

ஏற்கனவே அதிகரித்து காணப்பட்ட எரிபொருள் உணவு விலைகள் மீதான உக்ரைனில் யுத்தத்தின் மோசமான தாக்கத்தால், பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடைந்துள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பும் குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக நாணயப் பெறுமதியிறக்கம், அதிகரிக்கும் உணவு விலைகள், எரிபொருள் தட்டுப்பாடு ஆகியன உருவாகியுள்ளன.

இதற்கு மேலதிகமாக தற்போதைய பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை, வீடுகளின் வருமானம் மீது தாக்கத்தை அதிகரிப்பதுடன் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதைக் கடினமாக்கியுள்ளது.

உணவு, எரிபொருள், இறக்குமதி பொருள்களின் விலைகள் அதிகரிப்பும், உணவு விநியோகத்தில் ஏற்படும் குழப்பங்களும் 2022 இல் பணவீக்கத்தை மேலும் அதிகரிக்கப்போகின்றன. இதன் காரணமாக இலங்கையில் உணவுகள் கிடைப்பது குறைவடையப்போகின்றது.

அதிகாரிகள் ஏப்ரல் 2021 முதல் நவம்பர் மாதம் நடைமுறைப்படுத்திய உரக்கொள்கை காரணமாக நெல் உற்பத்தி மிகவும் குறைவானதாகக் காணப்படப்போகின்றது.


இதன் காரணமாக இலங்கை உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்ய இறக்குமதியை நம்பியிருக்கவேண்டியிருக்கும். எனினும் உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையக்கூடும் என்பதால் இறக்குமதிக்கான திறன் பாதிக்கப்படும்.

அதிகரிக்கும் அரசியல் பதற்றம் தொடர்பாகக் கரிசனைகள் அதிகரிக்கின்றன. இவை பொருளாதாரத்தின் பாதைக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

வருமானம் குறைவடைந்துள்ளமையும் விலை அதிகரிப்பும் போதுமான உணவுகளைப் பெறுவதற்கான வீடுகளின் திறன்களைப் பாதிக்கின்றன.

மார்ச், ஏப்ரல் மாதத்தில் எடுக்கப்பட்ட சிறிய ஆய்வு மூலம் கிட்டத்தட்ட அனைத்து வீடுகளும் உணவு தொடர்பான சமாளிக்கும் உத்திகளைப் பயன்படுத்துவதும் அரைவாசிக்கும் மேலான வீடுகள் மலிவான அல்லது குறைந்தளவு விரும்பப்படும் உணவுகளை நாளாந்தம் பயன்படுத்துவதும் தெரியவந்துள்ளது.

# நீதி இல்லாத நாடுகளில்தான் பயங்கரவாதம் உருவாகிறது!



## பௌத்த மதகுரு கருத்து

நீதி இல்லாத நாட்டில் பயங்கரவாதம் உருவாகின்றது என பௌத்த கற்கைநெறிகளிற்கான வல்பொல ராகுல நிறுவகத்தின் தலைவர் கல்கந்தே தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பேட்டியொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் காடையர்கள் போன்ற பௌத்தமதகுருமார்களை வளர்த்தது ஊக்குவித்தது, பல்வேறு இடங்களில் அவர்களை பயன்படுத்தியது என கல்கந்தே தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நீதி இல்லாத நாட்டில் பயங்கரவாதம் உருவாகின்றது. பொறுப்புக்கூறல் என்பது அரசமைப்பிலோ அல்லது நீதித்துறையிலோ உள்வாங்கப்படவில்லை சேர்க்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் என்பது செயலமர்வுகளை நடத்துவது, அறிக்கைகளை வெளியிடுவது, டொலர்களை பெற்றுக்கொள்வதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூகத்தின் காயங்களை ஆற்றாவிட்டால் குடும்ப வன்முறை, துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன அதிகரிக்கும் எனத் தெரிவித்துள்ள பௌத்தமதகுரு தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் சிங்கள பௌத்த கொள்கையைப் பயன்படுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இம்முறை அது ஆபத்தான விதத்தில் பயன்படுத்தப்பட்டது. முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது எனத் தெரிவித்துள்ள கல்கந்தே தம்மானந்த தேரர், இவர்கள் முஸ்லிம்களை ஆபத்தானவர்களாகச் சித்திரித்தனர் எனவும் சிங்கள பௌத்தர்களைத் தனியான குழுவாகவும் ஏயை சமூகத்தினரை எதிரிகளாகவும் காண்பித்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கம் சிங்கள பௌத்த கவசத்தை தனது நலனிற்காக அதிகளவிற்கு பயன்படுத்தியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதமருக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையில் கருத்துவேறுபடா?

## மறுக்கின்றது மத்திய வங்கி

பிரதமருக்கும் தனக்குமிடையில் கருத்துவேறுபாடு காணப்படுவதாக வெளியாகும் தகவல்களை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க நிராகரித்துள்ளார்.

பிரதமருக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையில் கருத்துவேறுபாடு காணப்படுவதாக சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன என அறிகின்றோம் என மத்திய வங்கி டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி ஆளுநர் இவ்வாறான கருத்துக்களை கடுமையாக நிராகரிப்பதோடு, இலங்கையின் பிரதமருக்கும் தனக்கும் இடையில் சுமுகமான உறவு உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின்பொருளாதாரத்தின் மீட்சிக்காக பிரதமர் பாடுபடுகின்றார் என மத்திய வங்கி தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

# நிதி நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட அமைப்பு தமிழ்நாடு முதல்வரிடம் முக்கிய வேண்டுகோள்!



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தியாவின் தமிழ் நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவன மோசடியாளர்களை நாடு கடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ப்ரிவெல்த் குளோபல் நிதி நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவனத்தில் நிதி மோசடி தொடர்பாக இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாடு கல்முனை தனியார் மண்டபத்தில் இடம்பெற்ற போது பாதிக்கப்பட்டவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் – தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டுக்கு வெளியிலும் எமக்காக குரல் கொடுத்து கொண்டிருக்கின்ற தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களே! எமது நாட்டில் தமிழ் பேசும் மாகாணமான கிழக்கு மாகாணத்தில் பிரிவேல்த் குளோபல் நிதி நிறுவனம் என்ற பெயரில் 200 கோடி ரூபாவை மோசடி செய்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக உங்கள் நாட்டுக்குத் தப்பி ஓடிவந்து தற்போது திருச்சி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள சிஹாப் சரீப் மற்றும் அவரது மனைவி பர்சானா மார்க்கார் இருவரும் தற்போது சிறையில் உள்ளார்கள்.

இவர்களது விசாரணைகள் அனைத்தும் அங்கு நிறைவு பெற்றிருக்கின்றன என நாம் அறிகின்றோம். இதற்கு காரணம் இந்தியா – தமிழ் நாட்டுடன் நாம் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளோம்.மேலும் 1,400 குடும்பங்கள் இவர்களது நிதி நிறுவனத்தில் பண வைப்பு செய்து ஏமாற்றப்பட்டவர்கள்.தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் மிக சிரமங்களை நாம் எதிர்கொள்கின்றோம்.

அத்துடன் பொருளாதார நெருக்கடியான இக்கட்டான சூழலில் எமது நாட்டுக்கு பல்வேறு உதவிகள் செய்து எமது மனங்களில் தற்போது இடம்பிடித்துள்ளீர்கள். எனவே, சர்வேதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மோசடியாளர்களை உங்கள் நாட்டில் தடுத்து வைத்துள்ளார்கள். எனவே இவர்களை எமது நாட்டுக்கு நாடு கடத்தி எமது 1,400 குடும்பங்களின் கண்ணீரை துடையுங்கள் எனக் கோரிக்கை விடுக்கின்றோம் என குறிப்பிட்டனர்.

நாட்டின் சில பகுதிகளில் இயங்கி வந்த குறித்த நிதி நிறுவனம் கடந்த 06 வருடங்களாக கிழக்கு மாகாணம் உள்ளடங்களாக கிளைகளை ஆரம்பித்து இஸ்லாத்தை முன்னிறுத்தி சில மௌலவிகளின் ஆசிர்வாதத்துடன் எமது மக்களை பகடைக்காய்களாக்கி ஏமாற்றியுள்ள இந்நிறுவனத்தின் கிளையில் பண வைப்பு செய்தவர்கள் சுமார் 1,400 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என மேற்குறித்த விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ப்ரிவெல்த் குளோபல் நிதி நிறுவனத்தால் பாதிக்கப்பட்ட அமைப்பைச் சேர்ந்த தலைவர் ஏ.றிஸ்வாட், செயலாளர் ஏ.றஸாக், உப தலைவர் ஐ.எம். பர்ஸாத், பொருளாளர் எம்.ஐ.எம் வகீல் ஆகியோர் குறிப்பிட்டனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி அடங்கலாக அரசின் முக்கியஸ்தர்கள் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

## அரசாங்க உத்தியோகத்தர்களைத் தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பும் சுற்றுநிரூபம் விரைவில்!

### அமைச்சர் மனுஷ கூறுகிறார்

அரச உத்தியோகத்தர்களை தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு அனுப்புவது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சருடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து, அதற்குரிய சுற்றுநிரூபத்தை விரைவில் வெளியிடுவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணை பேச்சாளர் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரச உத்தியோகத்தர்களை வேலைவாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டம் தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

தொழில் அமைச்சு இதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, சுகாதார அமைச்சும் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

குறிப்பாக தாதியர் சேவை உள்ளிட்டவற்றுக்கான சட்டங்களை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சருடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வெகுவிரைவில் சுற்றுநிரூபமொன்றை வெளியிடுவதற்கு அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.




கடன் இன்றி டொலரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிமுறை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் ஆகும்.

எனினும் இதன் மூலம் கிடைக்கப் பெறும் டொலர் வங்கி முறைமை ஊடாக நாட்டுக்கு அனுப்பப்படாமையின் காரணமாக 70 கோடி டொலராகக் காணப்பட்ட வருமானம்கடந்தமார்ச்சில்23கோடிவீழ்ச்சியடைந்தது.

எனவே வெளிநாடுகளிலுள்ள இலங்கை பணியாளர்கள் வங்கி முறைமை ஊடாகத் தமது பணத்தை அனுப்புவார்களாயின் இந்த வருமானத்தை 50 கோடி டொலராக அதிகரித்து, அதன் மூலம் நாட்டில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

எனவே வெளிநாடு செல்பவர்களுக்கான விசேட சலுகைகளை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## இலங்கை போக்குவரத்துச் சபை ஊடாக சுற்றுலாத்துறைக்கு எரிபொருள் வழங்கல்

### சுற்றுலாத்துறை அமைச்சு தீர்மானம்



நாட்டின் சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்சாரத் தடைகளை தீர்க்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதற்கமைவாக சுற்றுலா நடத்துநர்களுக்கு எரிபொருள் தேவைகள் இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்கள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலாத்துறைக்கு எரிபொருளை வழங்குவதற்கான விசேட பொறிமுறை ஒன்று தொடர்பாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

இந்த வாரம் முதல் புதிய பொறிமுறை ஒன்றை அமைப்பதன் மூலம் நாட்டின் சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்சாரத் தடைகளைத் தீர்க்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

புதிய பொறிமுறையின் விரிவான தகவல் அடங்கிய ஆவணம் சுற்றுலாத்துறையில் பங்குபற்றுபவர்களுக்கு விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுற்றுலா நடத்துநர்களுக்கு எரிபொருள் தேவைகள் இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்கள் மூலம் வழங்கப்படும்.

சுற்றுலா நடத்துநர்கள், எரிபொருள் தேவைகள் மாவட்ட ரீதியாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு க்கு வழங்கப்படும்.

மேலும் அடுத்த சில மாதங்களில் ஹோட்டல் நிறுவனங்களுக்கான மின்சாரத் தடையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை மின்சார சபை உத்தேசித்து வருகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அரசியல் ரீதியிலான கட்சி பேதங்களை ஓரிருமாதத்துக்கு ஒதுக்கிவையுங்கள்!

### துமிந்த திஸாநாயக்க கோரிக்கை

அரசியல் பேதங்களை ஓரிருமாதத்துக்கு ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டையும் மக்களையும் காப்பாற்ற ஒத்துழைப்பு வழங்குமாறு சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போது நாட்டின் தேவையை கட்சித் தலைவர்களால் புரிந்துகொள்ள முடியாவிட்டால், நாடாளுமன்றத்தில் உள்ள இளம் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கத்துடன் இணைந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இதற்கான அர்த்தம் அமைச்சுப் பதவிகளை ஏற்பது அல்ல என்றும் மாறாக நாட்டை கட்டியெழுப்பி எதிர்கால நடவடிக்கைக்கு ஒரு நாடு இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஆகவே தற்போதைய நெருக்கடியைத் தீர்க்க அனைத்துக் கட்சிகளும் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடத்துக்கு சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்றும் அதுவே நெருக்கடியை தீர்க்க வழியமைக்கும் என்றும் துமிந்த திஸாநாயக்க குறிப்பிட்டார்.

## உலக சுகாதாரத்துக்கான அமைப்பு கொழும்புக்கு டெங்கு எச்சரிக்கை!

கொழும்பு மாவட்டத்திற்கு உலக சுகாதார அமைப்பு டெங்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 05 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் இலங்கையில் 2 ஆயிரத்து 52 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில் அதிகபட்சமாக மேல் மாகாணம் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் ஆயிரத்து 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவி வருவதாக கடந்த வாரம் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவிடம் எரிபொருளை வாங்க வாசு வலியுறுத்து!

உலக சந்தையின் சாதாரண விலையை விட 35 வீதம் குறைவாக ரஷ்யாவிடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் எரிபொருளை கொள்வனவு செய்கின்றன என அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எரிபொருளைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு தயார் என இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் எரிசக்தி அமைச்சிடம் கூறியுள்ளார் எனத் தெரிவித்த அவர், அந்தக் கோரிக்கைக்கு அமைச்சு இதுவரை பதிலளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் நட்புறவைப் பேணுவதற்காக ரஷ்யா வழங்கிய நீண்ட கால கடன் வசதியை நாங்கள் புறக்கணித்துவிட்டோம் என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

# 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற பஸில் ராஜபக்ஷ இடமளிக்கமாட்டார்

## அசோக அபேசிங்க இப்படிக் கருத்து



அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற பஸில் ராஜபக்ஷ ஒருபோதும் இடமளிக்க மாட்டார்.

இரட்டைக் குடியுரிமையை நீக்கிக் கொள்ளவோ, நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறவோ அவர் விரும்பவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் –

தனக்கு ஆட்சி நிர்வாகம் புரியவில்லை என்றும் சர்வதேச நாணய நிதியத்துக்கு சரியான நேரத்தில் செல்லவில்லை என்றும் கூறி நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவிக் காலம் முடியும் வரை வெளியேறப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பதவி விலகவிருந்த சந்தர்ப்பத்தில் , ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்று அரசாங்கத்தை ஆதரித்து அவர்களைக் காப்பாற்றும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

இன்று இலங்கை உலகில் தனிமைப்படுத்தப்பட்ட நாடாகியுள்ளது. ஆசியாவின் ஐம்பதாண்டு கால வரலாற்றில் வங்குரோத்தடைந்த நாடாக இலங்கை மாறியுள்ளது.

வரிசை யுகத்தை அகற்ற வந்த அமைச்சர்களுக்கு என்ன நடந்தது? ஊழலோடும் மோசடிகளோடும், வழக்குகளோடும் தொடர்புபட்டவர்களே ஆளும் தரப்பில் உள்ளனர்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு என்ன நடந்துள்ளது? அவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரே ஆளுந்தரப்பின் பிரதம கொறடாவாகவும் செயற்படுகின்றார்.

இவ்வாறானதொரு நிலையில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமறைவாக உள்ளார்.

எமது நாட்டை உலகம் ஏற்றுக்கொள்ளுமா? அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ளுமா? இந்த தோல்வியடைந்த ஆட்சியாளர்களுக்கு மேலும் சிக்கல் ஏற்படும் வரை பணம் அனுப்ப மாட்டோம் என வெளிநாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு வந்து ராஜபக்ஷக்களை பாதுகாக்கின்றார் என்பது மக்களுக்கு நிரூபணமாகியுள்ளது.

21 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற பஸில் ராஜபக்ஷ ஒருபோதும் இடமளிக்க மாட்டார். இரட்டைக் குடியுரிமையை நீக்கிக் கொள்ளவோ, நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறவோ அவர் விரும்பவில்லை – என்றார்.

# கொழும்பு வணிக மேல்நீதிமன்ற கட்டளை சேவகர் ரஷ்ய விமான விவகாரத்தால் பணி இடைநிறுத்தம்!

கொழும்பு வணிக மேல் நீதிமன்றின் கட்டளை சேவகர் (பிஸ்கல்) பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்தங்கள் அமைச்சு அவரை இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்து அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் ஏரோபுளொட் விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்றை இலங்கையிலிருந்து வெளியேற விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை (பின்னர் நீக்கப்பட்டது), விமான கட்டுப்பாட்டு மையத்துக்குள் அத்துமீறி பலாத்காரமாக கையளித்ததாகக் கூறப்படும் சம்பவத்தை மையப்படுத்தி, அவர் இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்த விடயத்தில் அவருடன் சேர்ந்து தடை உத்தரவை எடுத்து சென்றதாகக் கூறப்படும், மனுதாரர் தரப்பின் சட்டத்தரணிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளை பிரதம நீதியரசருக்கு நீதி அமைச்சு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக, நீதி அமைச்சரின் இணைப்புச் செயலர் சட்டத்தரணி தசுன் நாகஸ்ஹேன குறிப்பிட்டார்.

முன்னதாக குறித்த விமானத்துக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீக்கக் கோரி சட்ட மா அதிபர் சார்பில் முன்வைக்கப்பட்ட நகர்த்தல் பத்திரத்தின் வாதங்களின் போது மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் சுமதி தர்மவர்த்தன குறித்த பிஸ்கலுக்கு எதிராகவும், சட்டத்தரணிக்கு எதிராகவும் மன்றில் குற்றம் சுமத்தியிருந்தார். அத்துடன் வணிக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர்ஷ சேதுங்கவும் சட்டத்தரணியின் செயற்பாடு தொடர்பாக அதிருப்தி வெளியிட்டிருந்தார்.

மனுதாரர் தரப்பில் நீதிமன்றில் ஆஜராகும் சட்டத்தரணி அருண டி சில்வா நீதிமன்ற கட்டளை சேவகருடன் (பிஸ்கல்) கட்டுநாயக்க அதியுயர் பாதுகாப்பு வலையத்தில் அமைந்துள்ள விமான பயணக் கட்டுப்பாட்டு மையத்துக்குச் சென்று ரஷ்ய விமானம் வெளியேறுவதைத் தடுத்து தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தது எப்படி?

நீதிமன்றம் எனது சேவை பெறுநரான விமான பயண கட்டுப்பாட்டாளருக்கு எந்தத் தடை உத்தரவுகளையும் பிறப்பிக்காத நிலையில் சட்டத்தரணி ஒருவரும் நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவரும் இவ்வாறு நடந்து கொண்டமையின் பின்னணி என்ன? இது தொடர்பில் இந்த நீதிமன்றம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். – எனத் தெரிவித்து சட்டத்தரணியும் நீதிமன்ற உத்தியோகத்தரும் விமான பயணக் கட்டுப்பாட்டு மையத்துக்கு செல்வதை உறுதிப்படுத்தும் 14 படங்கள் அடங்கிய இறுவட்டொன்றையும் மேலதிக சொலிஸ்டர் ஜெனரால் சுமதி தர்மவர்த்தன நீதிமன்றில் கையளித்திருந்தார்.

இதன்போது மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் குறிப்பிட்ட விடயங்கள் உண்மையாயின் அந்நடவடிக்கைகள் ஊடாக தமது நீதிமன்ற அதிகாரம் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதவேண்டி உள்ளது என நீதிபதி ஹர் சேதுங்க திறந்த நீதிமன்றில் தெரிவித்திருந்தார். .

இது தொடர்பில் மனுதாரர் தரப்பான அயர்லாந்து நிறுவனம் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணிக்கு தனது அதிருப்தியை நீதிபதி வெளிப்படுத்தியமையுடன். சட்டத்தரணி ஒருவருக்கு இவ்வாறு நடந்துகொள்ள முடியாது என நீதிபதி இதன்போது குறிப்பிட்டார். சட்டத்தரணி பாரிய தவறொன்றைப் புரிந்துள்ளார் எனவும் அந்த விடயத்தை கண்டுகொள்ளாமல் இருக்க நீதிமன்றால் முடியாது எனவும் நீதிபதி இதன்போது குறிப்பிட்டிருந்தார்.

# செப்டெம்பர் மாதம் வரையும் அரிசி கையிருப்பில் உள்ளது

## விவசாய அமைச்சர் கூறுகிறார்

நாட்டில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை அரிசி கையிருப்பில் உள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டால் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு பின்னர் அது ஏற்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் திங்கட்கிழமை நடைபெற்ற ஆளும் கட்சிக் குழுக் கூட்டத்திலேயே தெரிவித்துள்ளார்.

அறுவடை போதுமானதாக இல்லாவிட்டால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஆளும் கட்சி பிரதிநிதிகள் குழு கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசாங்க அமைச்சர்கள் பலர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சப்புகஸ்கந்த எரிபொருள் நிலையத்தில் சீராக இடம்பெறும் சுத்திகரிப்புப் பணிகள்

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு திருத்தியமைக்கப்பட்டதை அடுத்து, அங்கு எரிபொருள் சுத்திகரிப்புப் பணிகள் தற்போது சீராக நடைபெற்று வருகின்றன என சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனூடாக , டீசல், மண்ணெண்ணெய், தார் மற்றும் உற்பத்தி செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றபோதிலும், பெற்றோலை உற்பத்தி செய்வதற்கு 7,8 நாள்கள் எடுக்கும். ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 90 ஆயிரம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் 20 முதல் 25 நாள்களில் தீர்ந்துவிடும்.

அதற்கு முன்னதாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் மூட வேண்டி ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

எமது நாட்டில் நாளாந்தம் 3 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலும், 5 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலும் 300 மெற்றிக் தொன் மண்ணெண்ணெய்யும், 1, 400 மெற்றிக் தொன விமானங்களுக்குபயன்படுத்தும்எண்ணெய்யும் தேவைப்படுகிறது. எவ்வாறாயினும் இந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது.

எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் முழுத் திறனில் இயங்கினாலும் நாளொன்றுக்கு 5 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிபொருளையே உற்பத்தி செய்ய முடியும்.

எனினும், நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சுத்திகரிப்பு நிலையத்துக்குத் தேவையான மசகு எண்ணெய் போன்றவற்றுக்காக மசகு எண்ணெய் மீண்டும் இறக்குமதி செய்வதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் பகுதியளவிலேயே இயங்கி வருகின்றது.


அதன்படி நாளொன்றுக்கு சுமார் 3 ஆயிரத்து 200 தொன் எரிபொருள் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகின்றது. ஈரானின் இலகுரக மசகு எண்ணெய்யைக் கொண்டே நாம் எரிபொருள் வகைகளை உற்பத்தி செய்திருந்தபோதிலும், முதன் முறையாகவே ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கச்சா எண்ணெய் மூலமாக எரிபொருள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஈரான் மசகு எண்ணெய்யிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எரிபொருளின் அளவை விடவும் ரஷ்ய மசகு எண்ணெய்யிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எரிபொருளின் அளவு குறைவாகும். – என்றார்.

# உலக சுகாதார அசெம்பிளிக்கு தைவானை பார்வையாளராக அழைக்கவும் சீனா எதிர்ப்பு

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்திற்கான அமெரிக்காவின் பிரதிநிதி இந்த ஆண்டு உலக சுகாதார அசெம்பிளியில் (WHA) தைவான் சேர்க்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

தைவானின் உலகத் தரம் வாய்ந்த நிபுணத்துவம் மற்றும் சுகாதாரத் துறையில் வலுவான ஆராய்ச்சி திறன்களால் உலக சுகாதார அசெம்பிளி பயனடையலாம் என்று தூதர் பொ க்ரோக்கர் உலக சுகாதார அசெம்பிளியின் வருடாந்திர மாநாட்டின் தொடக்கத்திற்கு முன்னதாகக் கூறினார்.

தைவானின் உலகத் தரம் வாய்ந்த நிபுணத்துவம் மற்றும் ஆராய்ச்சித் திறன்களிலிருந்து உலக சுகாதார அசெம்பிளி பயனடையலாம், அனைவருக்கும் ஆரோக்கியம் என்ற அதன் உறுதிப்பாட்டிற்கு இணங்க வாழ உதவலாம் என்று பொ ட்வீட் செய்துள்ளார்.




பதிலுக்கு, தைவானின் வெளியுறவு அமைச்சகம் க்ரோக்கருக்கு நன்றி தெரிவித்தது. தைவானின் திறன்களை அங்கீகரித்ததற்கு நன்றி தெரிவித்ததாக 'போக்கஸ் தைவான்' தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் (WHO) முடிவெடுக்கும் அமைப்பான உலக சுகாதார அசெம்பிளியின் வருடாந்திர கூட்டம் மே 28 வரை நடைபெற்றமையை ஒட்டி அதற்கு முன்னர் இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

பல நாடுகள் மற்றும் அமைப்புகளின் ஆதரவு இருந்தபோதிலும், தைவான் கூட்டத்தில் பங்கேற்க அழைக்கப்படவில்லை.

தைவானின் 14 இராஜதந்திர கூட்டாளிகளில், அவர்களில் பதின்மூன்று பேர் உலக சுகாதார அசெம்பிளியில் பார்வையாளராகப் பங்கேற்கத் தைவானை அழைக்கும் திட்டத்தைச் சமர்ப்பித்தனர். அமெரிக்க அரசாங்கமும் பார்வையாளர் அந்தஸ்துடன் உலக சுகாதார அசெம்பிளியில் தைவானைச் சேர்ப்பதற்கான தனது ஆதரவை நீட்டித்தது.

இந்த மே மாதம் 75 ஆவது உலக சுகாதார அசெம்பிளியில் தைவானை ஒரு பார்வையாளராக பங்கேற்க அழைக்கவும், அதன் நிபுணத்துவத்தை 75 ஆவது உலக சுகாதார அசெம்பிளியில் விவாதிக்கவும் உலக சுகாதார அமைப்பு அழைக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

ஒரு பார்வையாளராக உலக சுகாதார அசெம்பிளியில் கலந்துகொள்ள தைவானை அழைப்பது, சர்வதேச சுகாதார ஒத்துழைப்பு மற்றும் 'அனைவருக்கும் ஆரோக்கியம்' ஆகியவற்றுக்கான உள்ளடக்கிய அணுகுமுறைக்கான உலக சுகாதார அமைப்பின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும்.

தைவான் உலகளாவிய சுகாதார சமூகத்தின் மிகவும் திறமையான, ஈடுபாடு கொண்ட மற்றும் பொறுப்பான உறுப்பினராக உள்ளது. மேலும் முந்தைய உலக சுகாதார அசெம்பிளியில் கூட்டங்களில் பார்வையாளராக பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தைவானின் வெளியுறவு அமைச்சகம் கணக்கின்படி, இந்த ஆண்டு உலக சுகாதார அசெம்பிளியில் தைவான் பங்கேற்பதை 71 அரசாங்கங்கள், சட்டமன்ற அமைப்புகள் மற்றும் நாடாளுமன்றக் குழுக்கள் ஆதரித்துள்ளன என்று போக்கஸ் தைவான் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பு மற்றும் அதன் வருடாந்திர சட்டசபையில் தைவானைச் சேர்ப்பதற்காக பிரச்சாரம் செய்ய தைவானின் வெளியுறவு அமைச்சகம் முன்னதாக தைவான் நைட் வரவேற்பை நடத்தியது.

தைவான் 2009 முதல் 2016 வரை உலக சுகாதார அசெம்பிளி கூட்டங்களில் பங்கேற்றது, ஆனால் 2017 முதல், சீனாவின் அழுத்தம் காரணமாக அது விலக்கப்பட்டுள்ளது.

**(மூலம் : ஏ.என்.ஐ.)**

# கொவிட் தொற்றினால் சீனாவிலும் தள்ளாடுகின்றது பொருளாதாரம்!

ஆசியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் என்று கூறப்படும் சீனாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த கொண்டு வரப்பட்ட கட்டுப்பாடுகள் காய்கறிகள் மற்றும் பிற உணவுகளின் விலைகளை உயர்த்தியுள்ளன. இதனால் நுகர்வோருக்கு குறைந்த பணமே எஞ்சியுள்ளது.



சீனாவின் தேசிய புள்ளியியல் அலுவலகம் அண்மையில் வெளியிட்ட ஏப்ரல் நுகர்வோர் விலைக் குறியீடு, புதிய காய்கறிகளின் விலை கடந்த ஆண்டை விட 24 வீதம் அதிகமாக உள்ளது. அதிகரிப்பு விகிதம் மார்ச் மாத வாசிப்பை விட கிட்டத்தட்ட 7 சதவீத புள்ளிகள் அதிகம்.

பசுமையான பழங்கள், முட்டைகள் மற்றும் உருளைக்கிழங்குகளின் விலை 12 வீதம் முதல் 14 வீதம் அதிகம். ஒட்டுமொத்த நுகர்வோர் விலைச் சுட்டெண் 2.1 வீதம் உயர்ந்தது. இது ஐந்து மாதங்களில் மிக விரைவான வேகம்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயை எதிர்த்துப் போராட சீனா முன்னெடுத்த கடுமையான 'பூஜ்ஜிய கொவிட்' நடவடிக்கைகள் – ஷாங்காய் மீது விதிக்கப்பட்ட முடக்கம் – அவற்றின் அப்பட்டமான வடிவத்தை எடுத்துள்ளன – இந்தப் பணவீக்க உந்துதலும் அதன் விளைவுதான்.

தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க நெடுஞ்சாலைகளுக்கான அணுகலை அதிகாரிகள் மூடியுள்ளனர். கூடுதலாக, பல டிரக் சாரதிகள் வைரஸ் பாதித்த பகுதிகளுக்கு விநியோகம் செய்ய தயக்கம் காட்டுகின்றனர் எனக் கூறப்படுகிறது, அதன் பிறகு வீட்டிலேயே தனிமைப்படுத்த வேண்டிய தேவையைத் தவிர்ப்பதற்காக.

இந்த விநியோகச் சங்கிலி சீர்குலைவுகளுடன், உயர்ந்து வரும் எரிபொருள் விலைகள், குறிப்பாக போக்குவரத்துச் செலவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆற்றல், வலு, சக்தி நெருக்கடி ஏப்ரல் மாதத்தில் பெட்ரோல் மற்றும் பிற எரிபொருள்களின் விலைகளை 28 வீதம் உயர்ந்தன.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் குடும்பங்களின் வாங்கும் சக்தியைப் பறித்துள்ளது. சீனாவின் முக்கிய நுகர்வோர் விலைக் குறியீடு, ஆற்றல் மற்றும் உணவைத் தவிர்த்து, ஆக 0.9 வீதம் என்ற வளர்ச்சியில் சிக்கியுள்ளது. இது செலவினங்களின் பலவீனத்தைக் குறிக்கிறது.



அண்மையில் வெளியிடப்பட்ட சீனாவின் உத்தியோகபூர்வ உற்பத்தியாளர் விலைக் குறியீடு, ஏப்ரல் மாதத்தில் 8 வீத லாபத்தைக் காட்டியது. நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுக்கான அளவீடுகள் சுமார் 50 வீதம் உயர்ந்து, மார்ச் மாதத்தில் பெறப்பட்ட லாபத்தை நீட்டித்தது.

தனியார் துறை சீன நிறுவனங்கள், பெரும்பாலும் தொழில்துறை மதிப்புச் சங்கிலியில் கீழ்நோக்கிய சரிவை எதிர்கொண்டுள்ளன. கடுமையான போட்டி மற்றும் பலவீனமான நுகர்வோர் செலவினங்களின் காரணமாக பெரும் நெருக்கடியான, மோசமான நிலையில் அவை உள்ளன. மாறாக, குறைந்த வருமானப் பிரிவினரால் வலி உணரப்படலாம். தனியார் துறை 80 வீதம் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதால், வேலைவாய்ப்பு நெருக்கடி மற்றும் வருமானம் குறைவது நுகர்வோர் செலவினங்களை மேலும் பாதிப்புத் திசைக்கு இழுக்கும்.

காலைக்கதிர் Kalaikkathir

## கோட்டா பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடு முன்னெப்போதுமில்லாத மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் இந்த நாடாளுமன்றம் கூடும் போதும், இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கான ஏதேனும் முன்னேற்றம் வராதா என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷவின் கடந்த ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தை பார்த்தீர்களானால் – இப்போது வாசிப்பீர்களானால் – நீங்கள் இன்றைய பட்டினி நிலையால் சாவதற்கு முன்னர், சிரித்து வயிறு வலித்துச் செத்து விடுவீர்கள். அதில் தான் ஆட்சிக்கு வந்தால் வருமான வரியை குறைப்பேன் என்று தொடங்கி, பல்வேறு வரிகளை நீக்குவது பற்றிய பட்டியலை வெளியிட்டு இருக்கிறார். பெறுமதி சேர் (வற்)வரியையும் தேசக் கட்டுமான வரியையும் 17 விதத்திலிருந்து வெறும் எட்டு வீதமாகக் குறைப்பேன் என்றார். பல்வேறு வரிகளை அடியோடு இல்லாமலாக்குவது பற்றி அதில் அவர் குறிப்பிட்டு இருக்கிறார். பெரும் வரி சலுகைகள், வரி நீக்கங்கள் ஆகியவற்றை தேர்தல் வாக்குறுதியாக அவர் அறிவித்திருக்கிறார். அவற்றை இங்கு நான் ஆவணமாகச் சமர்ப்பிக்கிறேன்.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டதும் இது குறித்துக் கவனமெடுத்து 2019 ஒக்டோபர் 19ஆம் திகதி ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டி விடயத்தை மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார் அப்போதைய நிதி அமைச்சர் மங்கள சமரவீர. இந்தத் தேர்தல் வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்படுமானால் நாடு மிக விரைவில் லெபனான் மற்றும் வெனிசுலா நிலைமையை அடைந்து விடும் என்று அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் எச்சரித்தார் மங்கள சமரவீர. நாட்டின் துரதிஷ்டம் அது அப்படியே நடந்துள்ளது. மங்கள சமரவீரவுக்கு அதிர்ஷ்டம் போலும் இந்த மோசமான, அவல நிலையை நேரில் பார்ப்பதற்கு அவர் இங்கு இப்போது நம் மத்தியில் இல்லை.

அத்துடன் விடயம் முடியவில்லை. 2019 அக்டோபர் 30ஆம் தேதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த வரி விலக்குக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப் பட்டால் என்ன நடக்கும் என்பதை டுவீட்டர் செய்தி மூலம் மங்கள சமரவீர அம்பலப் படுத்தினார்.

'கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த வரிவிலக்கு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கை வங்குரோத்து நிலை, கடன் மீளச் செலுத்த முடியாத கட்டம், கிரீஸ் நாட்டின் பாணியிலான கடன் நெருக்கடி ஆகியவற்றை நோக்கி கடுகதி ரயிலில் பயணிக்கும் நிலைமை ஏற்படும். வற் வரி கழிவு மட்டும் சுகாதாரம், பாதுகாப்பு, ஓய்வூதியம் ஆகியவற்றுக்கான முழு செலவுக்கு சமமானதாக இருக்கும்' – என்று அவர் எச்சரித்தார். அவர் எச்சரித்த படி அப்படியே நடந்து இருக்கின்றது. ஆகவே இந்த நிலைமை வரும் என்று யாரும் முன்னர் எதிர்பார்த்து எச்சரிவில்லை என்று கூறமுடியாது. இந்தத் திட்டத்தை கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்த போதே நாட்டின் நிதி அமைச்சர் இது மோசமான நிலைமையை ஏற்படுத்தும் என எச்சரித்திருந்தார்.

இந்த வரிவிலக்கு அறிவிப்பால் மாத்திரம் நாடு முழுசாக இந்த நிலைமைக்கு வந்து விட்டது என்று நான் கூறவரவில்லை. ஆனால் அந்த நிலையை நோக்கி நாடு நகர்வதற்கான வாசலை திறந்து விட்டது இந்த பொருத்தமற்ற வரிவிலக்கு நடவடிக்கைதான்.

2020 ஏப்ரல் இலேயே இலங்கை மத்திய வங்கி நாடு இத்தகைய ஆபத்து நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதைஈரகசிய அறிக்கைகள் மூலம் நாட்டுத் தலைவருக்கு எச்சரித்திருந்தது. இந்த நிலைமை தொடர்ந்தால் எந்த நாட்டிடமும் புதிதாகக் கடன் கூட வாங்க முடியாது என்ற உண்மையை அரசுக்கும் மத்திய வங்கி தெரிவித்திருந்தது. கடைசியாக 2020 ஜூலை – ஒகஸ்டில் சர்வதேச நிதி கட்டமைப்பிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம்.

அவ்வளவுதான். அதுதான் நடந்தது.

இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு முற்றும் முழுதுமாக காரணமான தனி நபர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தான். அவரே இன்றும் நாட்டின் தலைவர். ஜனாதிபதி.

சிலர் இந்த விடயத்தை அரசியலாகப் பார்க்காதீர்கள், அப்படியே விட்டுவிட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகளை நோக்குங்கள் என்று சொல்லுகிறார். சரிதான். அப்படி செய்யலாம். பொருளாதாரத்தை திருத்துவதானால் தவறிழைத்தவரை முதலில் நீக்க வேண்டும். அவரை வைத்துக்கொண்டு பொருளாதாரத்தை நிமிர்த்த முடியாது. இந்த மோச நிலைமை ஏற்பட்டதற்கு மிக முக்கியமான – பெருமளவு பொறுப்பான – ஒரே நபரை நாட்டின் தலைவராக வைத்துக்கொண்டு எப்படிப் பொருளாதாரத்தைத் திருத்த போகிறீர்கள்?

ஏன் பிரதமர் ராஜினாமாச் செய்தார்? ஏன் முழு அமைச்சரவையும் ராஜினாமாச் செய்தது? ஏன் மத்திய வங்கியின் ஆளுநர் ராஜினாமாச் செய்தார்? ஏன் திறைசேரியின் செயலாளர் ராஜினாமாச் செய்தார்? அரசுத் தரப்பில் இருந்த 42 பேர் சுயாதீனமாக இயங்குகிறார்கள் என்று ஏன் அறிவித்தார்கள்?

ஒரு நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பும் எதிரணியும் இருப்பதுதான் ஜனநாயக முறைமை. இங்கு ஆளும் தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் மூன்றாவது ஒரு தரப்பு இருக்கின்றது – சுயாதீனக் குழு என்று சொல்லிக்கொண்டு. இவையெல்லாம் கேலிக்கூத்தானவை. இந்தநிலைமையும் இந்த நாடாளுமன்றமும் கூட மக்கள் ஆணையை இழந்துவிட்டது என்பதற்குச் சான்றுதான். தார்மீக ரீதியில் இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது ஆகிவிட்டது. அதை இனி முறையாகக் கலைப்பதுதான் எஞ்சி இருக்கின்றது.

இங்கு இருக்கும் ஒவ்வொரு எம்.பியும் தம் பாட்டில் சுயாதீனமாக – சுயேச்சையாக – செயற்படுகின்றார்கள் என அறிவிக்கிறார்கள். அதனால் இந்த நாடாளுமன்றம் செயலிழந்து விட்டது என்பது தான் அர்த்தம்.

ஆகவே, ஜனாதிபதி நிச்சயமாக பதவியை விட்டு விலக வேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும்.

மிகப்பெரிய பொருளாதார மோச நிலைமை நாட்டுக்கு ஏற்படுவதற்கான தவறை இழைத்த மிகப்பெரிய குற்றவாளி ஜனாதிபதி. அதனால் அவரைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

நாடாளுமன்றம் கூட அதன் நம்பகத்தன்மையையும் ஆணையையும் இழந்துவிட்டது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்றீர்கள். இப்போது அவை எங்கே? இப்போது உங்களிடம் இருப்பது குழுக்கள்தான். நாடாளுமன்ற சரித்திரத்திலேயே இல்லாதவாறு பல்வேறு குழுக்கள், பல்வேறு தரப்புகள் இயங்கி நாடாளுமன்றத்தின் நம்பிக்கையையே தகர்க்கும் நிலைமை. இந்த நிலைமையை நீங்கள் மாற்றாத வரை நாட்டின் பொருளாதாரத்தைக் கொஞ்சம் கூட உங்களால் உயர்த்த முடியாது. அதுதான் யதார்த்தம்.

எல்லா நிறுவனங்களும் நீங்கள் இத்தகைய நெருக்கடியிலிருந்து மீளவதானால் அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் என்று வலியுறுத்துகின்றன. அரசியல் ஸ்திரத்தன்மை எப்படி வரும்? பல்வேறு நபர்களின் தலைமைகளின் கீழ் பல்வேறு சுயேச்சைக் குழுக்கள் – சுயாதீன குழுக்கள் – தன்பாட்டில் இயங்குமானால் இந்த நாடாளுமன்றத்தில் எவ்வாறு அரசியல் ஸ்திரத்தன்மை வரும்? அதனால் நாடாளுமன்றத்தையும் கலைக்க வேண்டும். மக்கள் தீர்வுக்காக எங்களை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நாங்களோ பிரச்சினைகளின் பங்குதாரர்களாக இருக்கிறோம். இந்த வடிவத்தில் இருந்து எங்களால் மக்களுக்கு எந்தத் தீர்வையும் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதுதான் உண்மை. நாங்கள் மக்களின் பிரச்சினையைப் பற்றிப் பேசாமல், எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டன, எங்கள் பாதிப்பு, அது, இது என்று ஏதோ எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். எங்களால் எந்த தீர்வையும் தர முடியாது, இந்த ஜனாதிபதியையும் இந்த நாடாளுமன்றத்தையும் வைத்துக்கொண்டு நாங்கள் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை. தீர்க்க மாட்டோம். அரசியல் ஸ்திரத் தன்மையையும் தீர்வையும், ஏற்படுத்தாமல் நாங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் நாட்டுக்கு பல மில்லியன் டொலர் இழப்பு ஏற்படும் என்ற உண்மையை நாங்கள் மறக்கக் கூடாது.

எங்களால் தீர்வு தர முடியாது என்பதால் நாங்களாகவே இந்த நாடாளுமன்றம் கலைக்கப்படுகின்றது என்ற தீர்மானத்தை எடுத்து, ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்து பேசலாம், பேசவேண்டும் என்று ஜனாதிபதியும் பிரதமரும் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் இப்போது அதிலிருந்து அவர்கள் பின்வாங்கி விட்டார்கள்.

20 ஆவது அரசமைப்புத் திருத்தம் கூட வராது என்ற நிலையே நீடிக்கின்றது. – என்றார் சுமந்திரன்.

## நாட்டின் வருமானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

புதிய அரசமைப்புத் திருத்தம் ஊடாக மீளக் கொடுக்க வேண்டும். இதுவே நாட்டைப் பொருளாதார ரீதியிலும் ஜனநாயக ரீதியிலும் முன்னேற்ற பயன்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

தற்போது 21 ஆவது திருத்தம் தொடர்பில் பேசப்படுகின்றது இந்த 21வது திருத்தம் என்பது 19ஆம் திருத்தத்தின் ஒத்த ஒன்றே. ஆனால் அதனை முழுமையாக 19ஆம் திருத்தத்தின் வடிவம் எனக் கூற முடியாது. 19வது திருத்தத்தில் உள்ள பல விடயங்கள் 21வது திருத்தத்தில் இல்லை.

19 ஆவது திருத்தச் சட்டத்தை மீளக் கொண்டுவருவதன் ஊடாக மீளவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை கொடுக்க முடியும் என்பது மாத்திரமல்ல, பல விடயங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தலாம்.

நாடு பொருளாதார ரீதியாக பலமடைய வேண்டுமாக இருந்தால் மாகாணங்கள் விருத்தி அடைய வேண்டும்.

வடக்கு மாகாணசபை ஒழுங்காக இயங்கவில்லை, மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மாகாணசபை சரியாகச் செலவு செய்யவில்லை என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இதைப் பற்றி பேச மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? நாட்டை மிக மோசமான பாதையில் கொண்டு செல்ல அனைத்து வியங்களையும் செய்துவிட்டு, ஏனையவர்களுக்கு ஆட்சியதிகாரம் தெரியாது எனக் கூற எந்த யோக்கியதையும் கிடையாது.

இராணுவத்தைப் படிப்படியாக குறைப்பதற்கு ஏதாவது வழிமுறையை வைத்திருக்கின்றீர்களா? தற்போது உள்ள இராணுவம் என்ன செய்கிறது? முன்பள்ளி நடத்துவது, தமிழ் மக்களின் விவசாய நிலங்களைப் பறிமுதல் செய்து அங்கு விவசாயம் செய்வது, தமிழ்ப் பிரதேசங்களில் பௌத்த விகாரைகளைக் கட்டுவதையே இராணுவத்தினர் செய்கின்றனர்.

கோட்டா கோ கமவில் போராடக்கூடிய இளைஞர்கள், எதிர்க்கட்சிகள், இடதுசாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதில் கவனம் செலுத்தா விட்டால் மீண்டும் தவறுகளைச் செய்ய வேண்டியே வரும்.

கடந்த காலத்தில் இருந்த அரசாங்கத்தின் தவறான முடிவுகளும் தவறான கொள்கைகளுமே நாட்டை இந்தளவுக்கு கொண்டுவந்துள்ளது எனப் பிரதமர் கூறுகிறார். நான் பிரதமரிடம் கேட்கிறேன். நீங்கள் திருந்தி விடடீர்களா? வரலாற்றினை கற்றுள்ளீர்களா? கற்றுக்கொள்ளவிட்டால் மீண்டும் மீண்டும் இந்தத் தவறினை விட போகிறீர்களா?

பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்ட போது நூற்றுக்கணக்கான பரல் எரிவாயு சிலிண்டர்கள் மீட்கப்பட்டன. பொது மக்களுக்கு அமைச்சர்கள் பொருள்களைப் பதுக்கவேண்டாமென ஆலோசனை சொல்கின்றார்களே தவிர, தாங்கள் அதனைப் பின்பற்றுபவர்களாகத் தெரியவில்லை

21ஆவது திருத்தம் மூலம் நாடாளுமன்றில் இருந்து பறித்த அதிகாரங்களையும் மாகாணங்களிடம் இருந்து பறித்த அதிகாரங்களையும் உள்ளூராட்சி சபையில் இருந்து பறித்த அதிகாரங்களையும் கொடுக்க வேண்டும். இது எங்களுக்கு மாத்திரம் உரித்தானது அல்ல. சிங்கள உள்ளூராட்சி சபைகளும், சிங்கள மாகாணசபைகளும் இதன்மூலம் பயன் பெறும். இன்றைய மோசமான பொருளாதார சூழலில் இது நிச்சயம் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நடத்துவதற்கு காரியத்தை கொடுக்கும்

தமிழ் தேசிய கூட்டமைப்பு,தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி செயற்பட வேண்டும். – என்றார்.

## கடல் வழியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கட்டளைப் பிரிவின் குழுவொன்று மாரவில பொலிஸாருடன் இணைந்து நேற்று முன்தினம் காலை மாரவில பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டது.

அதன்போது, கடல்மார்க்கமாக சட்டவிரோதமாக தப்பிச்செல்ல முயன்றவர்கள் என சந்தேகிக்கப்படும் 13 ஆண்கள், ஒரு சிறுவன் மற்றும் ஆம்கடத்தலுடன் தொடர்புடைய நபர் என 9 முதல் 58 வயதுக்குட்பட்ட 15 ஆண்கள் அப்பகுதியில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த நிலையில் கடற்படையின் பொறுப்பில் எடுக்கப்பட்டனர்.

அத்துடன், கடத்தல் முயற்சிக்குப் பயன்படுத்தப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் கார் ஒன்றையும் வான் ஒன்றையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

இதேவேளை, சிலாபம் கடற்கரையில் நேற்று பிற்பகல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படை கட்டளைப் பிரிவின் குழுவினர் சந்தேகத்திற்கிடமான பல நாள் மீன்பிடி படகொன்றை அவதானித்து அதனை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

அதன்போது, 58 ஆண்கள், 5 பெண்கள், 6 குழந்தைகள் மற்றும் கடத்தலில் ஈடுபட்டவர்கள் 6 பேர் என ஒன்று முதல் 62 வயதுக்குட்பட்ட 76 பேரைக் கடற்படையினரின் பொறுப்பில் எடுத்தனர். பல நாள் மீன்பிடிக் படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாரவிலவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் மாரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிலாபம் கடற்பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், கல்பிட்டி, மாரவில, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகவும் மிகவும் ஆபத்தான வகையிலும் நாட்டிலிருந்து வெளியேற்ற முயலும் ஆட்கடத்தல்காரர்களுக்கு இரையாகித் தமது உயிர்களையும் உடமைகளையும் பணயம் வைப்பதைத் தவிர்க்குமாறும் கடற்படை பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், இத்தகைய கடத்தல் முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படுபவை காலாவதியான மீன்பிடிப் படகுகள் எனவும், அவற்றின் ஊடாக சட்டவிரோதமாக குடிபெயர முற்படுவது அதிக ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் கடற்படை எச்சரித்துள்ளது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# தமிழ் மக்கள் எங்கு நிற்கிறார்கள்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -29



### காலிமுகத்திடலின் உணர்வுகள்

காலிமுகத்திடல் போராட்டம் அமைதியானது, பலரும் மெச்சத்தக்கதாக நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்து அது ஏதாவது வன்முறையைத் தூண்டும், வளர்த்துவிடும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. அதில் பங்கு பற்றியவர்கள் – முக்கியமாகச் சிங்கள இளைஞர்கள் – உணர்ச்சிபூர்வமாகப் பல கோரிக்கைகளை முன் வைத்தனர். அவை நாடு முழுவதும் அல்ல, அதையும் தாண்டி சர்வதேசத்திலும் அங்கீகாரம் பெற்று எதிரொலித்தன. தமிழ் மக்கள் விழுந்தடித்து அதில் பங்குபற்ற விட்டாலும் அதனை ஆமோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

'கோட்டா கோ கம', 'மைனா கம' இரண்டுமே அரசியல் இன மத வேறுபாடுகளற்ற ஒரு புதிய ஸ்ரீலங்காவை வேண்டி நின்றன. சுதந்திரம் பெற்ற நாள் முதல் அரசியல்வாதிகளால் புரையேற்றப்பட்ட இன, மத, அரசியல் வேறுபாடுகளை வேரறுத்து, ஒரு புதிய திசையில் பயணிக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். ஸ்ரீலங்காவின் பண்பு நிறைந்த மக்கள் எல்லோருக்கும் அது ஏற்கத்தக்கதாக இருந்தது. பலரும் அவை நடக்க வேண்டும் என எதிர்பார்த்தார்கள் விரும்பினார்கள்.

ஆனால், அது, தங்களது அதிகாரங்களுக்கு சவாலாகிவிடும் முஸ்தீபுகள் என ராஜபக்ஷவின் சிங்களப் பேராண்மை கருதியமையால் அதைக் கலைத்துவிடத் தீர்மானித்தது.

நான் கணக்கெடுத்த வகையில் மஹிந்த ஒரு பாஸிசவாதி. இரண்டல்ல, பல முகங்கள், பல நாக்குகளும் கொண்டவர். அவரைப்பற்றிய எனது தனிப்பட்ட அபிப்பிராயங்கள், போரின் நடுவே அரசுடனான சந்திப்புகளுக்கு சென்ற போதும், அதன்பின்னர் அவர் நடந்து கொண்ட விதங்களையும் ஒட்டி எழுந்தவை.

தமிழ், ஹிந்தி, பொலிவூட் படங்களில் இப்படியான இரட்டை வேட மனிதர்களை அடிக்கடி சந்திக்கிறோம். மனைவியுடனும், பிள்ளைகளுடனும் கோவில்களுக்கு அல்லது விழாக்களுக்குச் சென்று பழுத்த ஆன்மீகப் பழமாகக் காட்டிக்கொள்ளும் ஒருவன், அதே நேரத்திலேயே தனது எதிரிகளை – அது மனைவியின்பக்கமானஉறவினர்களானாலும் – முடித்து விட ஒழுங்குகள் பண்ணிவிட்டு, எதுவும் தெரியாதவனாக நடிப்பது சர்வ சாதாரணம். மஹிந்த இந்த வகையைச் சேர்ந்த பச்சோந்தி. நயவஞ்சகர். இரட்டை வேடக்காரர். நடத்துகின்ற சமய ஆசார கிரியைகளாலும், எல்லா கோவில்களிலும் வழிபடுவதாலும், எல்லோருடனும் சிரிக்க சிரிக்க நம்பிக்கை தந்து பேசுவதாலும் மஹிந்த தனக்கென ஒரு பிம்பத்தை வளர்ந்திருந்தாலும், ஈரச் சீலையைக் கழுத்தில் போட்டு இறுக்கும் ஒரு பாஸிசவாதி.

அவரது தம்பி கோட்டாபயவும் தனது இராணுவப் பின்னணியில் தன்னைச் சர்வாதிகாரியாக பாவனை செய்து, தான் எடுக்கும் தீர்மானத்திற்கு குறுக்கே யாரும் வரக்கூடாது, நினைத்ததை முடிப்பவன் என்றும், தான் மனிதாபிமானமற்ற பொதுமன்னிப்புகளை எல்லாம் வழங்கினார் என்றும் கருதப்படுபவர். தனது வாழ்வில் தனது தமையன் மஹிந்தவைப் பிரதமர் பதவியில் இருந்து விலகச் சொல்லி கேட்டமைதான் தனது மனசாட்சியை உறுத்திய சம்பவம் என்று அவர் சொல்லும்போது, பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனுக்கு பிஸ்கட் கொடுத்துவிட்டு, சுடுவதற்கு உத்தரவு தந்தபோதும், வெள்ளைக்கொடியுடன் சரணாகதி அடைய வந்த நடேசன் போன்ற போராளிகளைச் சுட்டுத் தள்ளிய போதும் அல்லது சரணடைந்தவர்களை எல்லாம் காணாமலாக்கிய போது எல்லாம் அவர் அதில் சர்வாதிகாரக் கம்பீரத்தைக் கண்டாரே ஒழிய மனசாட்சியின் குரலைக் கேட்கவில்லை.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தன்னைப் பதவியை விட்டுப் போ என்று கேட்க யார் என்ற முனைப்பிலும் மமதையிலும் இருக்கின்றார்.

ஆனாலும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேச்சில் சொன்னதைச் செய்வார் என்ற பரவலான அபிப்பிராயம் கோட்டாபயவை ஒட்டி உண்டு. வாக்குறுதி அளித்தபடியேசுனில்ரத்தினாயக்காவுக்கு பதவியேற்ற சில நாள்களிலேயே பொது மன்னிப்பு வழங்கியமையையும், ஞானசார தேரருக்கு 'ஒரு நாடு; ஒரே சட்டம்' என்ற செயலணியை அமைத்துக் கொடுத்தமையையும், மகா சங்கத்தினருக்குத் தான் உறுதியளித்தமையை செய்தே தீருவேன் எனச் செயற்படுகின்றமையும் ஆதாரங்களாகப் பார்க்கப்படுகின்றன. ஆனால் மஹிந்தவோ தனது பச்சோந்திக் குணத்திற்கு அமைவாக 'கோட்டா கோ கம', 'மைனா கம' தாக்கப்படுவதற்கு முன் அனுராதபுரம் சென்று, மகாபோதியை வழிபட்டு, கருணை, காருண்யத்துக்கு உதாரண புருராக இருந்த புத்தர் பெருமானிடம் பணிந்து, மக்கள் எல்லோருக்குமாகத் தான் அங்குள்ள சங்க பல்லக்குகளிடம் எல்லாம் ஆசி கேட்டு, நாட்டுக்கான தியாகமாகத் தான் பிரதமர் பதவியை விட்டு வெளியேற முடிவு செய்கிறேன் என்ற படத்தைக் காட்டினார். அன்று அதுவும், அடுத்த நாள் வன்முறையும் அவர் போன்றவர்களுக்குப் புதிதல்ல. பிரபாகரனிடம் எப்பொழுதுமே பேசித் தீர்வு காண்பேன் என்று ஒரு புறம் கூறிக் கொண்டு, மறுபுறம் படை முன்னேற்றங்களை மேற்பார்வை செய்தவர் அவர்.

அடுத்த நாள் பஸ் வண்டிகளில் கொண்டுவரப்பட்ட அவரது ஆதரவாளர்கள் அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலேயே உண்டு, குடித்து, பேச்சுக்களைக் கேட்டு, போராட்டக்காரர்களை ஒருகை பார்க்கிறோம் என்று வெளியேறி, பின்னர் நடந்தவற்றை செய்து முடித்தார்கள். ஓர் ஆயுதம் தாங்கிய குழு ஒருவரின் வீட்டில் இருந்து, அவரது பேச்சுக்களின் பின் வீதிகளுக்கு இறங்கி ஆயுதமற்ற – வன்முறையற்ற – போராட்டத்தின் மீது தாக்கினார்கள் என்றால் அந்த உந்துதல் அந்த வீட்டுக்காரரிடம் இருந்துதான் வந்திருக்க வேண்டும். சுமந்திரன் உடனேயே கூறியபடி அவர்( மஹிந்தர்) முதலாவதாகக் கைது செய்யப்பட்டு விசாரிக்க பட்டிருக்க வேண்டும். ஆனால் காலம் கடந்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டு ஒப்புக்காக வாக்கு மூலங்கள் இப்போது எடுக்கப்படுகின்றன. மஹிந்தவின் இரட்டை வேடங்களைப் பலர் கிழி கிழி எனக் கிழிக்கிறார்கள்.

ஆனால் தற்சமயம் என்ன நடக்கின்றது? மஹிந்த திரும்பப் பிரதமராக வந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை எனப் பஸில் கூறுகிறார். யார் எப்படிப் போராடினாலும் தமது பதவிக் காலம் முடியும் வரைத் தாம் வெளியேற மாட்டார், தோற்றுப் போன ஜனாதிபதி என்ற பெயருடன் பதவியை விட மாட்டார், ஆனால் மீண்டும் தேர்தலில் போட்டியிட மாட்டார் என கோட்டாபய கூறுகிறார்.

அவர்களது கணக்கெடுப்பில் காலிமுகத்திடல் உணர்வுகள் எழுந்தாலும், அதிகாரத்தில் இருப்பது ராஜபக்ஷக்களே என்பதை தெளிவாகத் தெரிவிக்கிறார்கள். ரணில் பிரதமர் பதவியேற்று எவ்வளவு உதவிகளைப் பெற்றுக் கொண்டு விட்டார், என்ன செய்து கிழித்து விட்டார் என்று அமைச்சரவைக் கூட்டங்களில் கேள்விகள் கேட்கப்படுகின்றன இவையெல்லாம் ஒரு விதத்தில் இந்தியாவுக்கு சொல்லப்படும் செய்தியாகவும் பார்க்கலாம். அதாவது, தங்களையே சிங்களப் பேரினவாதத்தின் பிரதிநிதிகளாகக் கணித்து, மகா சங்கத்தின் விருப்பங்களுக்கு இணைந்து வராவிட்டால் நாட்டிற்காக தாம் சீன உதவிகளைத்தான் தேட வேண்டும் என்று சாடை மாடையாகச் செய்தியைக் கோடி காட்டுகிறார்கள். ஒருவழியில் எவ்வளவுதான் வெளியில் படங்கள் போடப்பட்டாலும் இந்திய உறவில் முறுகல் நிலை ஏற்பட்டு உள்ளதைக் காணலாம். ஏனெனில் ஸ்ரீலங்காவின் அரசியல் தரப்பில் ராஜபக்ஷக்களின் அதிகாரத்தை வெட்டிக் குறைக்கவோ அல்லது நீக்கவோதான் இந்தியா தனது காய்களை நகர்த்துகிறது. எந்தெந்தச் சக்திகள் இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக இருந்து, அதை நடைமுறைப்படுத்த முடியாமல் தடைக்கல்லாக நின்றார்களோ அவர்கள் இப்பொழுதும் உணவு, உதவிகளை ஏற்று, வாய்ச் சம்பிரதாயம் வைத்தாலும், இந்தியாவின் ஆளுமையை உள்வாங்குவதற்குத் தயாராக இல்லை. ஆகவே, இந்தப் பின்புலத்தில் தமிழ் மக்களும் தங்களது நோக்க அரசியலை சற்று தள்ளி வைத்து, யதார்த்த அரசியலைப் புத்திபூர்வமாகப் பார்க்க வேண்டும்.

(வளரும்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=